17.10.2016

அன்பான சகோதரிகளுக்கு,

ஆன்மீகக் குழுவினராகிய நாம் எமது நிறுவுனரின் பிறந்த தினத்தை முன்னிட்டு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம். எமது ஸ்தாபகரின் வாழ்வும் அவர் மூலமாக திருச்சபையும், நாமும் பெற்ற நன்மைத்தனங்களுக்கு நன்றி கூறும் முகமாக மாகாணமாக இணைந்து இந் நாளை சிறப்பிக்க நாம் விரும்புகின்றோம். “புதுவாழ்வு” என்னும் கருப்பொருளில் எம் வாழ்வைப் புதுப்பித்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இதற்கு உதவியாக வழிபாட்டிற்குரிய சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள முன் வருகின்றோம். இதனை அன்றைய வழிபாட்டிற்காக பயன்படுத்துமாறு பணிவன்புடன் கேட்டுகொள்கிறோம்.

ஆன்மீகக்குழு